அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

-109-

மலர் 1 | 109 | விரோதி௵—ஆடிமீ 1949௵ மே—ஜூன்மீ | இதழ் 4

MAHAMAHOPADHYAYA DR. ... LIBRARY ... MADRAS-90



பரமனைக் குறித்துத் தவமிருக்கும் பார்வதிக்கு ஈசன் கிழரூபத்துடன் காக்ஷியளித்து, பிறகு மணந்து கொள்ளுதல்.

(கந்த புராணச் சித்திர விளக்கம்—2.)

2½

110

சென்னை அடியார் ஞாயிறு திருக்கூட்டம்

சென்னை பூக்கடைப் பட்டணம் கோவில் என்று பொதுவாக அழைக்கப்படும் ஸ்ரீ சென்ன மல்லீஸ்வரர் தேவாலயத்தில் 26-6-49 ஞாயிற்றுக்கிழமை, ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்கள், புதிதாகக் கட்டப்பட்ட மண்டபத்தை 'அநுபூதி மண்டபம்' என்று பெயரிட்டுச் சிறப்பாக திறந்து வைத்தார்கள். திருக்கூட்டத்தின் தொண்டர்கள் ஏராளமாகத்திரண்டு வந்து, சௌகரியமாக உட்கார்ந்து, தெய்வீகப் பிரசங்கங்களில் ஈடுபட்டு ஆனந்திக்க, அதிக சாதனம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இதுவும் கந்தப்பனின் கருணை. பிரதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 முதல் 9-30 வரை 'கந்தரனுபூதி' விளக்கம் சென்ற 45 வாரங்களாக நடைபெற்று வருகிறது. வருகிற கந்த சஷ்டியில் பூர்த்தியாகி, உடனேயே ஸ்ரீ அருணகிரி நாதர் அருளிய "வகுப்புகள்" விளக்கம் ஸ்ரீ திருப்புகழ்மணி அவர்களால் நடத்தப்படும்.

அடியார் ஞாயிறு திருக்கூட்டம் அநுபூதி மண்டபத்திலேயே பிரதி ஞாயிறு மாலை 4 முதல் 6 மணி வரை "திருப்புகழ் பாராயண வகுப்பு" நடந்து வருகிறது. திருப்புகழில் ஈடுபட்ட சென்னை நேயர்களுக்கு இது ஓர் அரிய பிற்பகல் விருந்தாகும். அனைவரும் வருக ! பருகுக !!

பொருளடக்கம்

				பக்கம்
1.	கல்லும் சொல்லும்	(திருப்புகழ்மணி)	...	1
2.	சராசல வேலவன்	(கி. வா. ஜகந்நாதன்)	...	4
3.	நீல மயில்	(மோ. ஸ்ரீ. செல்லம்)	...	10
4.	பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்	(க. சோமசுந்தர செட்டியார்.)	...	13
5.	திருந்த வேண்டாமா	(அ ராமமூர்த்தி)	...	17
6.	ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம்	(வெங்கடராம சாஸ்திரி)	...	19
7.	சொற்பெரும் பொருட்கடல்	(V. S. வெங்கடராமன்)	...	22
8.	அது போதுமே	(செ. பொ.)	...	25
9.	தெய்வ வழிபாடு	(D. ராமஸ்வாமி அய்யங்கார்)	...	26
10.	பானக பூசை	(பொள்ளாச்சி N. S. ராமச்சந்திர ஐயர்)	...	29

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

"எல்லாருமின்புற் றிருக்கநினைப்பதுவே
யல்லாமல்வேறொன் றறியேன்பராபரமே"

மலர் 1 } விரோதி௵ ஆடி௴ 1949 ஜூலை—ஆகஸ்டு௴ { இதழ் 4

கல்லும் சொல்லும்

சொல்லின் வன்மையால் கல்லும் கரைந்து விடும். சொல்லின் திண்மையால் சொல்லே கல்லாய்ப் பாய்ந்து வினைகளை விரட்டி, துணை பயந்திடும் சொல்லின் தீமையால் சொல்லே கல் போன்ற தீமையை விளைத்திடும். சொல்லினில் ஜோதி காண்பார், கல்லினும் ஜோதி காண்பார். நம் புராணங்களில் கூறிய சரித்திரங்கள் இவைகளுக்குச் சான்றாகும்.

வள்ளி மாதா சிருஷ்டி யென்ற தினைப்புனத்து ஹ்ருதய ஸ்தானமாய் அறியப்பட்ட பரண்மிசை யேறி, ஆசாபாசமான பறவைகள் வந்து ஜீவராசிகளாம் தினைகளைக் கொத்திக் களையாது காப்பற்றவேண்டுமென்ற கருணையால் ஆ! ஓலம்! ஆலோலம் என்று கூவி புனம் காத்த பெருமை கந்த புராணம் கூறும். "பிண்டத்தில் உதவுவார் அண்டத்திற்கு உதவுவார்' என்று உணர்ந்தாள். கவண் ஒன்று கையேந்தி அதில் கல் வைத்துப் பறவைகளை விரட்டினாள். ஓங்காரமெனும் கவன்தான் அவள் கொண்ட கவன். முருகா என்னும் திவ்ய நாமமே அவள் உபயோகித்த கல். முருகா எனும் நாமத்தைக் கல்லாகக்

சித்தனை தாளில் வைத்ததொரு காதல்
சிற்கும் வகை யோத கினைவாயே.

சுருதி ஓங்காரமெனும் கவணில் ஏற்றி ஆசா, பாச, காம, க்ரோதங்களாகிய பக்ஷி ஜாதிகளை விரட்டி நின்றாள் வள்ளி. காப்பதற்குச் சொல்லும் கல்லாய் விட்டது. கல்லை வைத்தடித்தால் விரட்டப்படாத வெவ்வினையெல்லாம் சொல்லை வைத்தடித்தால், சிதறிப்போய் விடும் போலும்! இதனாலல்லவோ 'மொழிக்குத்துணை முருகா வெனும் நாமம்' என்று பாடியதும் அருணகிரி. அஹிம்சையின் உயிர் நிலை.

கல்லைக் கரைத்திடும் சொல் நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்திடவே யன்றோ அருணகிரி அநுபூதி பாடியதும். சிவாய நம வென்று சொல்லிக் கொண்டிருந்தாராம் ஸ்ரீ மாணிக்கவாசகப் பெருமான். அந்தச் சொல்லினில் உறைந்த ஜோதியாய் விளங்கும் சிவபிரான் உதயமாகிக் கல்லைப் பிசைந்து அதாவது தன் மனமாகியக் கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத் தழுத்தி வினை கடிந்தானும். பஞ்சாக்ஷர மெனும் சொல்லின் வன்மையும் தின்மையும் போற்றினார். கல்லும் கனியானது, அதாவது பழமானது ஒரு பழஞ் சொல்லின் வன்மை தானே சிவப்பழம் என்று சொல்வது உலக இயல்பு. சொல் தூய்மையுள்ளதானால், ஜோதியுடையதானால் நன்மையும், இனிமையும் பூண்டதானால் சொல்லே பழமன்றோ. பழத்தை நாவிலிட்டால் ருசிப்பது போல், சொல்லை நாவி விட்டால் சில சொற்கள் தித்திக்குமானால் சொல்லு பழந்தானே. பழஞ் சொல் ஒன்று கல்லைக்கனியாக்கியதென்றால் கனியாகாத கல், ருசிக்காத காய் என்றே தான் கொள்ள வேண்டும்.

சொல்வச் சொல்லத் தித்திக்குமே
அப்பா உந்றன் நாம ரஸம்

என்றார் முருக தாஸர்.

அநுபூதியில் நிறைந்து கிடக்கும் சொல்லெல்லாம் பழஞ்சொல். கல்லான மனதை நெகிழ வைக்கும் சொற்கள். சிவ ரஸமொழுகும் தேனொத்த நிறை சொற்கள்.

செப்பென வைத் துலகிற்பா வத்தெரி
சித்தவ நுக்ரகம் மறவேனே.

சொல்லால் கல்லாம் மனமும் கனியாய் விடும். ஏன்? 'ராமா' என்று ஓதிக் கொண்டிருந்த அகல்யையின் மேன்மைதான் என்னே! சொல்லால் கனி மாத்திரமன்று கன்னியுமாய் மாறிற்றன்றோ?

முன்னொருகால் நாரத பகவான் கையில் பிடித்த வீணையுடன் திடீரென்று ஒருகாட்டில் இறங்கி விட்டார். ஏன்? அருமையான கானம் காதில் விழுந்தது. தொண்டு கிழமாய் நின்ற ஸ்ரீ ஆஞ்சநேயமூர்த்தி ராமபஜனம் செய்தாராம். அந்த இசைச் சொல் நாரதரை இழுத்து விட்டது. வீணையை அருகில் ஒரு பாறைமேல் வைத்து விட்டு ஸ்ரீ ஆஞ்சநேய கானம் கேட்டுக் கொண்டே இருந்தார். அந்தக் கற்பாறை நெகிழ்ந்து விட்டது. வீணை அதற்குள் இறங்கி விட்டது ஆஞ்சநேயர் பஜனம் முடிந்ததும் ஸ்ரீ நாரத பிரம்மம் புறப்பட்டார். வீணையை எடுக்க முடியவில்லை. கற்பாறை வீணையைப்பற்றிக் கொண்டது. கற்பாறை நெகிழ்ந்த காலத்தில் அதனுள் அகப்பட்டுக் கொண்டதால் கற்பாறை திணிவு பட்டவுடன் வீணையையும் பற்றிக் கொண்டதென்று உணர்ந்தார். மறுபடியும் பாறையை நெகிழச் செய்ய ஸ்ரீ நாரதர் பாடினார். வீணையை மீட்க வேண்டுமென்ற குறியைக் கொண்டதனால் நிஷ்காமமின்றிச் செய்த நாரத பஜனையில் பாறை இளகவில்லை. மறுமடியும் ஆஞ்சநேயர் ராமபஜனை செய்து கொண்டிருக்கையில் பாறையும் நெகிழ்ந்தது, நாரதரும் வீணையை மீட்டுக் கொண்டார் என்பது புராணம்.

குறியைக் குறியாது குறித்துப் பஜனை செய்தால் ஏன் பாறையும் இளகாது? மானிட நெஞ்சமாகிய கற்பாறைகள் உருக வேண்டில், அன்பாம் வெள்ள மெடுக்க வேண்டில், ஆற்றல் பொருந்திய சொற்களாலன்றி இளக வைக்க முடியாது. இன்பச் சொற்கள் அவை. அன்பை வளர்க்கும் சொற்கள். குறியற்ற பஜனையும், அறிவுற்ற பண்பும், வேற்றுமை யெனும் திரிபற்ற உள்ளமும், ஆனந்த வெள்ளமும் தேக்கிச்சுகம் பெறவேண்டு வீரேல்,

---

உரவொடு புனைதர நினைதரும் அடியரொடு
ஒன்றாக என்று பெறவேனோ.

ஆண்டவன் நாமத்தை ஓதுவீர். அனுபூதி பாடுவீர். தொண்டர் குழாம் நாடுவீர். திருப்புகழை விரும்புவீர். நாட்டையும் தேவர் நாடாக்குவீர்.

நாகாசல வேலவன்

(கி. வா. ஜகந்நாதன்)

அருணகிரிநாதர் பாடிய அற்புதமான நூல்களுள் கந்தர் அநுபூதி, சுருங்கிய உருவத்தில் செறிந்த பொருளை உடையதாய் விளங்குகிறது. முருகனது திருவருளால் பெற்ற அநுபவத்தின் சிறப்பைப் பலபடியாக எடுத்துச் சொல்வது அது. கந்தவேளின் திருவருளால் அநுபூதி பெற்று, விருந்துண்டவன் ஏப்பமிட்டாற் போலத் தம் அநுபவாதிசயத்தைப் பாடியது அநுபூதி.

தாயுமானவர்,

"கந்தர் அநு பூதிபெற்றுக் கந்தர் அநு பூதிசொன்ன
எந்தையருள் நாடி இருக்கும்நாள் எந்நாளோ"

என்று பாடியிருக்கிறார்.

அருணகிரிநாதப் பெருமான் திருப்புகழ், கந்தர் அலங் காரம் முதலியவற்றைப் பாடிய பிறகு, திருவகுப்பையும் கந்தர் அநுபூதியையும் பாடினர் என்பர். இந்தப் பூத உடலைப் பிறர் போக்குமாறு போக்காமல் கிளி உருவம் பெற்று இறைவன் திருக்கரத்தில் அமர்ந்து அநுபூதிப் பாக்களைப் பாடியதாகச் சொல்வதும் உண்டு. மற்றப் பாக்களை பாடிய நிலைக்கும் அநுபூதிப் பாடல்களைப் பாடிய நிலைக்கும் வேறுபாடு உண்டு. பூத உடலின் தொடர் பின்றி உயர்ந்த நிலையில் 'சுக சொரூபம்' அடைந்த ஏமாப் பில் பாடியது அது.

சூத்திரங்களைப்போல விரிந்த கருத்தும் சுருங்கிய சொல்லமைதியும் உடைய கலிவிருத்தங்களால் ஆனது அநு

பூதி. ஐம்பத்தொரு பாடல்களும் ஐம்பத்தொரு நூலுக்குச் சமானமானவை. திருப்புகழ் அலங்காரம், திருவகுப்பு ஆகிய நூல்களில் விரிவாகச் சொல்லப் பெறும் பல செய்திகள் அநுபூதியில் இல்லை. அநுபவத்தையும் தத்துவப் பொருளையும் நுண்ணிய கருத்துக்களையும் செறிவுறக் கொண்டது அநுபூதி மணிப்பாக்கள்.

பல பல தலங்களுக்குச் சென்று திருப்புகழ்ப் பாக்களைப் பாடிய பெரியார் அருணகிரிநாதர். சைவ சமயாசாரியர்களும், ஆழ்வார்களும் தம்முடைய திருவாக்கால் புனைந்த தலங்கள் சிறப்புப் பெறுவதுபோல, அருணகிரியார் திருப்புகழால் பெருமை பெற்ற தலங்கள் பல. திருப்புகழில் பல தலங்களின் பெருமை வருகின்றது. கந்தர் அலங்காரத்திலும் பல தலங்களைக் குறிப்பிடுகின்றார். அப்படியே திருவகுப்பிலும் தலங்களின் பெயர்கள் வருகின்றன. ஆனால் கந்தர் அநுபூதியில் பல தலங்கள் வரவில்லை. நுண்பொருளைச் சுருங்கச் சொல்லும் அநுபூதியில் உலகுக்குப் புறம்பான மேல் நிலையில் பாடும் பாடல்களே அமைந்தமையின், உலகில் உள்ள தலங்களின் நினைவு வராதது இயல்பே ஆகும்.

ஆயினும், ஒரே ஒரு தலத்தை மாத்திரம் அநுபூதியில் அருணகிரிநாதர் குறிப்பிடுகிறார்.

கூகா எனஎன் கிளைகூ டிஅழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவ நா லுகவித்
த்யாகா சுரலோ கசிகா மணியே.

இந்தப் பாட்டில் "நாகாசல வேலவ" என்ற இடத்தில் நாகாசலம் என்ற தலம் வருகிறது. நாகாசலம் என்பது, கொங்கு நாட்டிலுள்ள திருச்செங்கோட்டுக்கு ஒரு பெயர். அது மிகப் பழைய தலம். சிலப்பதிகாரத்தில் அதைப்

பற்றிய செய்தி வருகிறது. அங்குள்ள முருகனைச் செங் கோட்டு வேலர் என்று வழங்குவது வழக்கம். "நாகாசல வேலவ" என்ற தொடர் இந்த வழக்கத்தை நினைந்து பாடியதென்றே தோற்றுகிறது.

அருணகிரிநாதர் பிற தலங்களில் ஒன்றையும் குறிக்கா மல் திருச்செங்கோட்டை மாத்திரம் குறிப்பிடக் காரணம் என்ன ? இது ஆராய்ச்சி செய்வதற்குரியது.

*   *   *

அறுபது வயசுக்கு மேல் ஆன ஓர் ஆடவரும், அவரு டைய மனைவியும் சென்னையில் வாழ்ந்து வந்தார்கள். நல்ல வசதியான வாழ்க்கை. மூன்றடுக்கு மாடி வீடும், பொரு ளும், பிற பண்டங்களும் குறைவின்றிப் பெற்றவர்கள். இப் போது இந்த வள வாழ்வில் இருப்பினும் இளமையிலே வறுமைக்கு ஆளானவர்கள். சின்னஞ் சிறு கிராமத்தில் ஓட்டைக் கூரை வீட்டிலே அந்த ஆடவர் வாழ்ந்தவர். அப் போதே அவருக்குத் திருமணமாகி விட்டது. அந்தக்கூரை வீட்டில் ஒரு சிறிய அறையிலே அவர் கடிமணம் புரிந்து கொண்டார்.

முதுமைப் பருவத்தை நெருங்கிக் கொண்டிருந்த அவர்கள் இப்போது தம் கிராமத்துக்குச் சென்றார்கள். பழைய கூரை வீட்டை ஒருவாறு செப்பஞ் செய்திருந்தார் கள். அங்கே போய்த் தாம் முதல் முதல் சந்தித்த அறை யில் போய் நின்றார்கள். அப்போது அந்த இருவருக்கும் உண்டான இன்பத்துக்கு எல்லையே இல்லை. பழைய ஞாபகங்களெல்லாம் வந்தன. மாட மாளிகையில் வாழும் இன்பத்தை அநுபவிப்பவர்களானாலும், பழமையின் நினைவு மீதூர, முதல் முதல் இன்பம் பெற்ற அவ்விடம் எவ் வளவோ உயர்வாகத் தோன்றியது அவர்களுக்கு.

இது மனித இயற்கை. அருணகிரிநாதரும் இத்தகைய மன இயல்பிலே பாடிய பாட்டு இது. பல பல தலங்களுக்

காலனெனையணு காமலுனதிரு
காலில்வழிபட அருள்வாயே.

குச் சென்று பாடிய அப்பெருமான் ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு விண்ணப்பத்தைப் போட்டு வைத்தார். செங் கோட்டிலும் ஒரு விண்ணப்பம் செய்தார். அது அப்படியே பலித்து விட்டது. செங்கோட்டிற் செய்து கொண்ட விண்ணப்பம் பலித்துப் பயன் பெற்ற காலத்தில், குறிப் பிட்ட விண்ணப்பம் போட்ட இடத்தை மறக்க முடியுமா? அந்தக் கிழத் தம்பதிகளைப்போல நன்றியறிவும் பழைமை நினைவும் மீதூர, நாகாசலத்தை மறவாமல் பாடினார்.

*　　　　*　　　　*

அவர் என்ன விண்ணப்பம் செய்து கொண்டார்?

"தெய்வத் திருமலைச் செங்கோட்டில்
　　வாழும்செழுஞ் சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற
　　வேன்உனைநான்;
ஐவர்க் கிடம்பெறக் கால்இரண்டு
　　ஓட்டி அதில்இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து
　　காத்தருளே"

என்ற கந்தர் அலங்காரப்பாட்டுத்தான் அந்த விண் ணப்பம். "தெய்விகசக்தி பொருந்திய அழகிய மலையாகிய திருச்செங்கோட்டில் எழுந்தருளி யிருக்கும் செழித்த சோதி உருவப் பொருளே, கூர்மையை உடைய வேலா யுதத்தைக்கொண்ட தேவா, நீ என் வேண்டுகோளைநிறை வேற்றினால் நான் என்றும் உன்னை மறக்கவே மாட்டேன். ஐந்து இந்திரியங்கள் வாழ்வதற்கு இடம் உண்டாகும்படி யாக இரண்டு காலை வைத்து, அதில் இரண்டு கைகளையும் வைத்த வீடாகிய இந்த உடம்பு, மரணத்தினால் அழிவதற்கு முன்னே நீ எழுந்தருளி வந்து பாதுகாத்து அருள்செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொள்கிறார்.

சராசர வியாபக பராபர மனோலய
　　சமாதி அநுபூதிபெற நினைவாயே.

பூவுலகில் இருந்தாலும் தெய்வத்தன்மை உடைய மலை திருச்செங்கோடு என்று சொல்கிறார். அங்கே செங்கோட்டு வேலன் எழுந்தருளி யிருப்பதை, 'வைவைத்த வேற்படை வானவனே' என்று குறிக்கின்றார். பூத உடல் இறந்துபட உயிர் பிரிந்து செல்வது இயற்கை. இந்த மாதிரி மரணம் தமக்கு வேண்டாம் என்று வேண்டுகிறார். மரணம் சம்பவிக்கு முன்னே வந்து பாதுகாக்க வேண்டுமென்பது அவர் பிரார்த்தனை.

இந்த வேண்டுகோள் பலித்தால் உன்னை மறவாமல் நினைப்பேன் என்றும் சொல்கிறார்.

* * *

பிரார்த்தனை பலித்தது. அருணகிரிநாதர், பிறர் உடம்பை நீப்பதுபோல நீத்தார் இலர். பூத உடம்பு மறைய, கிளி உருவைப் பெற்றனர். 'ஐவர்க்கு இடம் பெறக் கால் இரண்டு ஓட்டி அதில் இரண்டு கைவைத்த வீடு குலையுமுன்' முருகவேள் அருள் செய்தான்; தெய்வத் திருமலையில் உள்ள வேற்படை வானவனிடம் சமர்ப்பித்த விண்ணப்பம் பயன்பெற்றது. அப்போது சொன்ன வாக்கைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா? "மறவேன் உனை நான்" என்று வாக்களித்தாரே! அதை மெய்ப்பிக்க வேண்டுமல்லவா? ஆகவே பூத உடலுக்குப் புறம்பே, அநுபூதி பெற்று நின்ற நிலையில், மற்றத் தலங்களை மறந்தாலும் திருச்செங்கோட்டை மறக்கவில்லை. 'தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ் சுடரே, வைவைத்த வேற்படை வானவனே' என்று விரிவாகச் சொன்னதை, "நாகாசல வேலவ" என்று சுருக்கமாகச் சொல்கிறார். அவனை மறவாமல் நினைப்பது கிடக்கட்டும். அந்த நினைப்பைப் பாட்டாகப் பாடும் ஆற்றலை அந்தப் பெருமானே அருணகிரி நாதருக்குத் தந்திருக்கிறான். நாலு கவியையும் தியாகம் செய்திருக்கிறான்.

கலமற் றறிவற் றுணர்வற் றனைற்று
கதியெப் படிபெற் றிடுவேனே.

அப்படி இருக்கையில் மறவாமல் நினைத்துப் பாடுவது தானே நியாயம்? ஆகவே நாகாசல வேலவனை மறவாமல் பாடுகிறார்.

கூகா எனஎன் கிளைகூ டிஅழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
த்யாகா சுரலோ கசிகா மணியே.

"நாகாசல வேலவனே! ஆசு, மதுரம், விஸ்தாரம், சித்திரம் என்னும் நால்வகைக் கவிபாடும் திறமையையும் எனக்கு அருளிய பெருமானே! தேவலோக வாசிகளின் சென்னியிலே மணிபோல முடித்தற்குரிய தலைவனே! நீ செய்த உபகாரத்தை என்னென்று சொல்வேன்! உலகத்தில் ஏனை மாந்தர்கள் திறத்தில் உடம்பை விட்டு உயிர் நீங்கும்போது சுற்றத்தார் யாவரும் கூடிக் கூகா என அழுது புலம்புவார்கள். அப்படி என் கிளை கூடி அழுது நிற்க, நான் மரணத்தை அடையாமல், உண்மையான உபதேசத்தைச் செய்தவாறு என்ன ஆச்சரியம்!" என்று அவர் பாராட்டி வியக்கிறார்.

மற்றவர்கள் இறப்பது போல இறக்கக்கூடாது, அதற்கு முன்னே வேலவன் திருவருளை அடைய வேண்டும் என்ற ஆசையைக் கந்தர் அலங்காரப் பாட்டில் வெளியிட்டார்; செங்கோட்டு வேலவனிடத்தில் விண்ணப்பஞ் செய்து கொண்டார். முருகன் அருள் செய்தான். உடம்பு அழிய உயிர்போகும் நிலை அவருக்கு வரவில்லை. அவர் பெற்ற அருள் அதிசயமானது. அந்த அதிசயத்தை அநுபூதியிலே சொல்கிறார்.

முருகன் அவரை, இந்தப் பொய்வீடு குலையு முன்னே காப்பாற்றினன். அருணகிரிநாதரும் தம்வாக்குப் பிறழாமல் காப்பாற்றிக்கொண்டார். அநுபூதி அடைந்த நிலையில் பிற

இரிதல் ஒழிந்து மனது களிந்து
உன் இணையடி என்று புகழ்வேனோ.

தலங்களை மறந்தாலும், எண்ணியது எண்ணியவாறே பலித்த இடமாகிய நாகாசலத்தை மறக்கவில்லை.

நீல மயில்

(வித்துவான் மோ. ஸ்ரீ.செல்வம்)

நம் முருகப் பெருமானுக்கு வாகனம் மயில், ஆயுதம் வேல்; மாலைகடம்பு; கொடி குக்குடம்; மனைவியருள் ஒருத்தி குறத்தி; ஒருத்தி தேவராசன் மகள். முருகன் என்ற நினைப்பு வரும்போதெல்லாம் மயிலும் வேலும், கோழியும் கடம்பும், வள்ளியும் யானையும், நினைவுவந்தே தீரும். இவைகளோடு தொடர்ந்து கடலும் குன்றும் சூரும் நினைவுக்கு வராமல் இரா.

“பக்ஷியெனும் உக்ர துரகமும், நீபப் பக்குவ மலர்த்
தொடையும், வடிவேலும், குக்குடமும்”

என்பது அருணகிரிப் பெருமான் வாக்கு. “கடலழக் குன்றழச் சூரழ” என்பது அவர் வாக்கே ஆகும்.

முருகன் பரமன்; ஒப்புயர்வற்ற பரம் பொருள். பாசத்தால் கட்டுப்பட்டு உலகமாகிய கடலில் உழலும் ஆத்மாக்களுக்குக் கருணையால் நல்வழி காட்டி ஆட்கொள்ளும் பெருந்தகை, ஜீவர்களைக் கருணையால் ஆட்கொள்ளும் சாதனங்களே பெருமான் கொண்டுள்ள சாதனம் என்பர் அறிந்தோர்.

மயிலாகிய அவன் வாகன நிறத்தை நீலமென்றும் பச்சையென்றும் கூறுவர். நீல மாயின் அது உலகோர் கண்களில் சதா பட்டுக் கொண்டிருக்கும் வானத்தின் நிறம்; அல்லது உலகைச் சூழ்ந்து வளைந்து உலகினும் மூன்று பங்கு மிக்கு நிற்கும் கடலின் நிறம்; இந்த இரண்டு

வனசமென வண்டு தனதனன வென்று
மருவு சரணங்கள் அருளாயே.

நிறங்களுமே கண்டோர் மனத்தைக் கவரும் நிறங்கள். வானமும் கடலும் எல்லையற்ற பெருமைக்கு அறிகுறிகள்; புலவர்கள் வாக்கில் எல்லையற்ற தன்மைக்கு உவமையாக நிற்பவை இவை. ஆகாயத்தை வான வெளி என்பர். வெளி என்பதே ஆகாசம். எனவே எல்லையற்ற வெளியைத் தன் காற்கீழ் அடக்கி நிற்பவன் பெருமான் என்பது மயில் வாகனன் என்பதால் விளங்கும் உண்மை. அதோடு பக்தர்கள் கண்களில் சதா பட்டு நின்று அவர்களைத் தன்பால் கவரும் ஆற்றலும் இந்த வாகனத்துக்கு உண்டு. பெருமான் பக்தர்களைத் தன்பால் கவர்வதற்காக என்று ஒரு சாதனம் அமைத்துக் கொண்டால் அது வானத்தையும் கடலையும் விடச் சிறப்பாக அமைவது எப்படி? "உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடல் கண்டாங்கு" என்ற நக்கீரர் வருணனையை நோக்குக; கடலே மயில் என்பது விளங்க வில்லையா!

கடலும் வானமும் உலகைக் காக்கும் பொருள்களுள் சிறந்தவை. கடல் நீரே சூழ்ந்து நின்று மழைக்குக் காரணமாகி எல்லாமக்களும் உயிர் வாழ்வதற்கு அவசியமான உப்பு முதல் அரசரும் விரும்பி ஏற்கும் முத்து பவளம் வரையில் எல்லாப் பொருள்களையும் மக்களுக்குத் தந்து உதவும். ரத்னாகரம் என்பது கடலின் பெயரல்லவா? வானமும் அவ்வாறே உலகைக் கவிந்து காப்பதோடு, உலகுக்கு ஒளியும் உயிரும் தருகிறது; மழையையும் தருகிறது. மழையால், (உணவால்) உடலையும் ஒளியால் (ஞானத்தையும்) உயிரையும் காத்து நிற்கிறது. இந்தத் தன்மைகளெல்லால் முருகனுடைய வாகனம், முருகனுக்கு அடங்கியவை, முருகன் ஏவல்வழி நிற்பவை என்பதைக் காட்டவே முருகன் வாகனம் மயில் என்றனர் போலும்.

பச்சை நிறமே நிறம். பசுமையே செழிப்பு, பசுமையே செல்வம், பசுமையே இன்பம். "பயிர்

இடுகாட்டில் என்னை எரியூட்டு முன்
உன் இருதாட்கள் தம்மை யுணர்வேனே.

பச்சைகளெல்லாம் பச்சைப் பசேலென்று கண்ணையும் மனத்தையும் கவர்கின்றன" என்பது கவிகள் வருணனை. இந்தப் பசுமை நிறம் உலகெங்கும் நிறைந்தது; மக்கள் கண்களையும் மனத்தையும் கவர்வது. மக்கள் உடலுக்கு உணவையும், புலன்களுக்கும் மனத்துக்கும் உயிருக்கும் இன்பத்தையும் தரும் நிறம் பச்சை. உலகுக்கே உயிராகிய இந்தப் பச்சையே மயில். காக்கும் கடவுளாகிய ஸ்ரீமந் நாராயணன் பச்சைமா மேனியன் அல்லவா?

மயில்உடலெல்லாம் கண்களைக் கொண்டது. கண்கள் அறிவுக்கு, ஞானத்துக்கு அறிகுறி. எனவே உடம்பெல்லாம் கண்ணாகிய மயில் என்பதில், ஞானப்பிழம்பு, ஞான உருவம் என்பதுதான் தோன்றுகிறது. எனவே, ஞானப் பிழம்பின் மேல் நிற்பவன் முருகன். "ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு" என்பதையும், "ஆன தனிமந்த்ர ரூப நிலை கொண்ட தாடு மயிலென்ப தறியேனே" என்பதையும் சேர்த்துப் பாருங்கள்; அருணகிரி நாதர் நினைப்பும் இதுவே என்பது விளங்கும்.

கலைகளுக் கெல்லாம் ஆதியானது நடனக்கலை. இதுவே எல்லாக் கலைகளுக்கும் தாயகம் என்பதைத்தான் நடராஜதத்துவம் விளக்குகிறது. பாட்டு, தாளம், வாத்தியம், சித்திரம் முதலிய கலைகளெல்லாம் நடனக்கலைக்கு அங்கம் என்பதே அறிவாளிகள் துணிபு. இந்த நடனக்கலையை இயற்கையாகக் கொண்டது மயில். எனவே கலைகளெல்லாம் முருகனைத் தாங்குகின்றன. கலைகளின்மேல் தோன்றுபவன் அவன். கலை அவனுக்கு ஏவல் செய்கிறது. உண்மைக் கலைஅறிவு காரணமாகத் தோன்றுவதுதான் பரமாத்ம அறிவு. இத்தகைய உண்மைகள்தாம் மயில் வாகனத்தால் விளங்கும் உண்மைகள்.

எல்லையற்ற தன்மை, வெளி, கவர்ச்சி, உலகக் காப்பு அல்லது ரக்ஷை, இன்பம், குளிர்ச்சி அல்லது பசுமை,

---

துய்யவரி வண்டு செய்ய மதுவுண்டு
தள்ளிய கடம்பு தாவேனும்.

ஞானம் அல்லது அறிவு, கலை ஆகிய இந்தத் தன்மைகளை எல்லாம் சுட்டக் கூடிய மயிலே முருகனுக்கு வாகனம் என்றால் முருகன் பரமன் என்பது சிறப்பாக விளங்க வில்லையா ?

மயில் பாம்புக்கு விரோதி. "வாளெழுமிற துற்றபகு வாய்தொறு நெருப்புமிழும் வாசுகி எடுத்துதறும் வாசி" என்றார் இதை. பாம்பு பாசத்துக்கும் பந்தத்துக்கும் மாயைக்கும் வஞ்சனைக்கும் உவமையாவது, அறிவுறியாவது. ஆகவே ஞானமே மயில் என்பது நன்குவிளங்கும்.

இவ்வாறே ஆராய ஆராய நம் முன்னோர்கள் அமைத்த தெய்வ உருவ அமைப்புக்களின் தத்துவம் நன்கு விளங்கி அவர்கள் அறிவாற்றலை நினைத்துப் பிரமிக்கச் செய்யும். இப்படி உண்மையை உணர்ந்து ஒவ்வொன்றையும் உள்ள படி அநுபவிக்கும்ஆற்றலை நீலமயில்முருகன் அருள் வானுக.

பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்

(க. சோமசுந்தர செட்டியார்)

1. சைவர்களாகிய தமிழர்களுக்குப் பிரமாண நூல் களாக விளங்குபவை நால்வர் பெருமக்களாலும் இன்னும் ஏனைய தெய்வீகப் புலவர் பெருமக்களாலும் அருளிச் செய்யப்பெற்ற தேவாரம் முதல் பெரிய புராணம் ஈறாக வுள்ள பன்னிரு திருமுறைகள் எனப்படும் "தமிழ் வேத மாம்." முதல் 11 திருமுறைகள் ராஜராஜ சோழன் காலத் தும் 12-ந் திருமுறையாகிய பெரிய புராணம் அநபாய

வள்ளியென் தாவி கொள்ளைகொளு நாளில்
உய்யவொரு நீபொற் கழல்தாராய்.

சோழ அரசன் காலத்தும் வகுக்கப் பெற்றுள்ளன. இவற்றையே நாம் தினந்தோறும் பக்தி சிரத்தையுடன் நியமமாகப் பாராயணம் செய்தல் வேண்டும். இப்படிப் படனம் செய்து பயன் பெற்றவர் பலருள்ளார். பொருள் கிடைக்கும் ; மனைவி மக்கள் கிடைப்பர்; நோய் நீங்கும்; யமவாதனை ஒழியும். இன்னும் இன்னோரன்ன பல நன்மைகள் ஏற்படும். துன்பங்களும் நீங்கும். எனவே, இவற்றை நாம் தினந்தோறும் தவறாமல் படனம் செய்து பயன் அடைவோமாக.

2. இனித்தற் காலத்திய தமிழன்பர்கள் தேவாரம் முதலிய அருணூல்கள் கடவுளைப் புகழ்தலையே கொண்டு விளங்குகின்றன என்பர். இது அறியாமை! என்னை? இத்திருமுறைப் பாடல்களில் தமிழர் நாகரீகம் உண்டு. அடியார் வீரம் உள்ளது. ஆண்டவன் புகழ் மிளிர்கின்றது. புராண வரலாறுகள் பல அடங்கியுள்ளன. பெண்கள் கற்பு பிரகாசிக்கின்றது. இயற்கை நயங்கள் செறிந்து கிடக்கின்றன. இன்னும் இவை போன்ற பல பொருள்கள் தமிழ் வேதத்தில் இருக்கின்றன என்றும் நாம் இதைத் தவிரப் படித்து உய்ய வேண்டிய வேறு நூல்கள் தமிழ்நாட்டில் உண்டா? என்றுகூடச் சந்தேகிக்க இடம் இருக்கின்றது! எனவே, இப்பகுதிகளை யொன்றன் பின் ஒன்றாய் நமது அமிர்த வசனியில் ஆராய்ந்து எழுதி வரலாம் என்று எண்ணியுள்ளேன். ஆண்டவன் துணை செய்வானாக!

3. முதன் முதலாகத் திருஞான சம்பந்தர் அருளிச் செய்த தேவாரத் திருமுறைகளிலிருந்து சில இயற்கை

பத்தியை எனக்கருளி முத்தியை அளித்தவளர்
பச்சைமயில் உற்று வரவேணும்

நயங்களை இங்கு தொடங்கி எழுதி வருவேன். அன்பர்கள் ஏற்றுக் கொண்டு அடியேனை ஊக்குவிப்பாராக.

" புவி முதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்க்
கரண நான்கராய்,
அவையவை சேர் பயனுருவாய் அல்லவுருவாய்
நின்றான் அமருங் கோயில்,
தவம் முயல்வோர் மலர் பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின் காய்கள்,
கவணெறி கற்போற் சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே. "

[சீகாழி - முதல் திருமுறை - பண்மேகரா கக்குறிஞ்சி

பின்னிரண்டடிகளிலுள்ள இயற்கை நயத்தைக் கவனித்து மகிழவும். " சிவபூசை செய்யும் அன்பர்கள் சிவார்ச்சனை நிமித்தம் மலர் கொய்யச் சென்று, உயர்ந்த கிளைகளின் நுனியில் பூத்துள்ள மலர்களைப் பறிக்க எண்ணி, அம்மரக்கிளைகளை மெல்லவொடிந்து விடாமல் தம்கையிலுள்ள வளைந்த கொம்புகளினுல் பற்றி யீர்த்து வளைத்துப் புட்பங்களைக்கொய்து கொண்டு மெல்ல அவைகளை உயரவிட, அக்கிளைகள் வில் போல் மேலே சென்று தமக்கு மேலுள்ள மாங்கிளைகளைத் தாக்க, அவற்றில் காய்த்துத் தொங்கும் மாம் பிஞ்சுகள், கவண் கயிற்றால் சுற்றி வீசப்பட்ட கற்கள் போலத் தூரத்தே உள்ள குளங்களில் சென்றுவிழ, அங்கு உல்லாசமாய் நீந்திக் கொண்டிருக்கும் பட்சிக் கூட்டங்கள், அப்பிஞ்சுக்களைக் கண்டு கற்கள் எனப் பயந்து ஓடும் தன்மை வாய்ந்த நீர் நிலைகள் நிறைந்து விளங்கும் கழுமலம்" என்று பொருள்படும்.

உணக்கையிடு படுபாவி எனக்குனது கழல்பாட
உயர்ச்சிபெறு குணசீலம் அருள்வாயே.

4. சிறிய குழந்தையாகிய ஆளுடைய பிள்ளையார் தாம் திருவவதாரஞ் செய்த சீகாழிப்பதியைக் குறித்துப் பாடிய அருமையான திருப்பாட்டு. இயற்கை யழகில் ஆண்டவனையும், அவன் பூசையையும், அவனைப் பூசிக்கும் சிவ பூசையாளர்களையும், நீர் வளத்தையும், நந்தவனப் பெருமையினையும், மலர்களின் செறிவையும், மரங்களில் அறுப்பாரின்றி அபரிமிதமாக விளைந்துள்ள மாமரங்களின் செழிப்பையும், இன்னும் இன்னோரன்ன பல நயங்களையும் கண்டு களித்து அதனை நாமும் காட்சியில் கண்டு களிக்க வைத்தார்.

5. இனி முன்னிரண்டடியில் உள்ள ஆண்டவனது லட்சணங்களைக் கவனிப்போம். உலகிற்கும், உலகிலுள்ள உயிர்களுக்கும் தலைவனாக விளங்கும் கடவுள் (சிவன்) எங்கும் வியாபித் திருக்கிறான்.' உலகில் கண் முன் தோன்றும் எல்லாப் பொருள்களாயும் விளங்குகிறான். இது மட்டுமா? உலகிலுள்ள எல்லா உயிர்கள் தோறும் அவரவர் உள்ளத்தில் ஒளிந்து நின்று அவைகளை இயக்கிக் கொண்டும் இருக்கிறான். இவற்றைத் தான் சித்தாந்த சாத்திரங்கள் கடவுள் ஒன்றாய் இருக்கின்றான், பலவாய் எல்லாப் பொருள்களாயும் இருக்கின்றான். உயிர்க்குயிராயும் விளங்குகின்றான் என்று பேசுகின்றன. இதனையே தாயுமானப் பெருந்தகையாரும், "ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய் ஆடுங்கருணைப் பரஞ்சோதி" என்று அருளிச் செய்துள்ளார்கள்.

(தொடரும்)

பருத்தமயில் மிசை நினைத்த பொழுதுன
பதத்து மலரினை யருள்வாயே.

திருந்த வேண்டாமா?

(அ. ராமமூர்த்தி)

உலகம் பல விதம். பல விதமாக இருப்பதால் தான் இது உலகமாக இருக்கிறது. இவ்வுலகின் கண் உள்ள மனிதர்களும் மற்ற ஜீவராசிகளும் தங்கள் உருவம், குணம், அறிவு இவற்றால் மாறுபட்டிருக்கிறார்கள். இது இயற்கை.

மனிதனும் மற்ற ஜீவராசிகளும் உயிருடன் இவ்வுலகில் வாழ உணவு, உடை, இடம், வாகனம், நட்பு, பொருள் போன்ற பல சாதனங்கள் வேண்டியிருக்கின்றன. அவற்றைத் தேட, அனுபவிக்க அடிப்படையாக அமைந்திருப்பது வாழ்க்கை. ஆனால் இதுதான் வாழ்க்கை என்று நிச்சயமாக அறுதியிட்டுக் கூறிவிட முடியாது.

வாழ்க்கையை நடத்த - அனுபவிக்க ஏதுவானவற்றை அடையும்பொழுது மனிதன் இன்பம் அடைவதாக எண்ணுகிறான். எனவே இன்பம் என்பது சுகத்தின் அடிப்படையில் தோன்றுகிறது.

இந்த இன்பத்தை - சுகத்தை எவ்வாறு அடைவது என்பதில்தான் மனித முயற்சியின் வெற்றி தோல்வி அடங்கியிருக்கிறது அம் முயற்சியின் ரேகைகளையே மனிதனுடைய அபிலாசைகள் என்று குறிப்பிடுகிறோம்.

மனிதன் இன்பத்தை - சுகத்தை நாடுகிறான். அல்லும் பகலும் அதற்காகவே பாடு படுகிறான். அவனுடைய பகுத்தறிவு - சிந்தனை - செயல் எல்லாமே சுகத்தின் அடிப்படையிலே செலவிடப் படுகின்றன.

ஆனால் இந்த இடத்தில்தான் மனிதன் மகத்தான தவறு செய்கிறான். எது இன்பம்? - என்று தீர்மானிப்பதில்தான் அந்தத் தவறு ஏற்படுகிறது.

சாதாரணமாக மனிதன் உழைத்து, உண்டு, உறங்குவதில் சுகம் காண்கிறான் என்று சொல்லலாம். உலக

சுகங்களை அனுபவிக்கும்போது இன்பம் அடைகிறுன் என்று கூறலாம். அவனுடைய தேவைகள் பூர்த்தியாகும் பொழுது - அவனுடைய அபிலாசைகள் மதிக்கப்படும் பொழுது. அவனுடைய மனதில் ஓர் ஆறுதலுணர்ச்சி ஏற்படுகிறது.

ஆனுல் அந்த ஆறுதலுணர்ச்சி நீடிப்பதில்லை ஏனென்ருல் முடிவடையக்கூடிய எந்த ஒரு சுகத்திலும் அவன் பூரண இன்பத்தைக் காண முடியாது. "மேலும் என்ன"? என்ற ஒரு உறுத்தலே அவனைச் செயலாற்றத் தூண்டுகிறது - முன்னேற உதவுகிறது. அவ் வுணர்ச்சி அடிப்படையாக உள்ளுணர்வோடு வளர்ந்தால் அவன் ஒரு இலட்சியவாதியாக ஆகமுடியும்.

எனவே, நிலையான ஒன்றில்தான் மனிதன் பூரண சுகத்தை அடையமுடியும் என்று ஏற்படுகிறது. அந்த சுகத்தை அனுபவிக்க வேண்டுமானுல் அவன் ஒரு இலட்சியவாதியாக மாறவேண்டும். நிலையான ஒன்றை நாடி அவன் இலட்சியம் - குறிக்கோள் அமைய வேண்டும்.

நாம் இலட்சியப் பாதையில் முன்றே வேண்டுமானுல் நிறைய சிந்திக்க வேண்டும். ஆழ்ந்த சிந்தனை ஒன்றினுல்தான் ஆனந்த நிலையை எய்த இயலும். அதற்கு அனுசரணையாக இருப்பது உயர்ந்த படிப்பு, பயனுள்ள விவாதம் முதலியன.

தனக்காக உழைத்து, தான் மட்டும் உண்டு, பிறருக்காக சேவை செய்யாது வீணுக உறங்குவதுடன் சாதாரணமாக மனித வாழ்க்கையின் எல்லைக் கோடு நின்று விடுவதாக எண்ணிவிடுகிருேம். அதற்கு அப்பால் நாம் போவது இல்லை. மரணத்தைப் பற்றிய சிந்தனைகூட எழுவதில்லை நம்மிடையே உள்ள மகத்தான சக்தியை உணர்வதில்லை. வாழ்வை வீணுளாக்குவதில் ஒரு வெறுப்பு ஏற்படுவதில்லை.

தோன்றுவன எல்லாம் அழியக் கூடியனவே. இது மறுக்க முடியாத ஒரு உண்மை. உலகில் காணும் ஜீவ

திருப்பரங்கிரி தீரனுக்கு ஹராஹரோஹரா ஸ்வாமி

திருச்செந்தூர்ச் செல்வனுக்கு ஹராஹரோஹரா ஸ்வாமி

ராசிகளுடன் அழியக் கூடியதே. எனவே பெரியோர்கள் இகலோக இன்பங்களை சிற்றின்பம் என்று குறிப்பிடு கிறார்கள். அதற்கு மாறாக அழியாத ஒன்றை - எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த - அந்தப் பரம்பொருளை அடை தலே - அதனோடு இரண்டறக் கலத்தலே பேரின்பம் என் றும், மனிதன் அதையே நாடவேண்டும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

அதற்கான வழி வகைகள் யாவை?

தன்னுயிரைப்போல் பிற உயிர்களனைத்தையும் கருதி, இவ்வுலகிலுள்ள எல்லாம் பரம்பொருளின் படைப்பே என்று உணர்ந்து, வாழ்க்கையை நாம் மேனிலையை எய்தும் வகையில் திருத்தி யமைத்துக்கொண்டு எல்லாவற்றிலும் ஈசனைக் காண முயற்சித்தலே சிறந்த வழி.

அச் சிறந்த வழியை நாம் பின்பற்ற வேண்டாமா? எல்லாவற்றையும் கடவுளின் அம்சமாகக் காணும் மனோ பாவம் நமக்கு ஏற்படவேண்டும். இதற்கு நமது தற்கால வாழ்க்கை முறையே மாறவேண்டும். மேனிலை அடைய நமக்கு அளிக்கப்பட்ட ஒரு மகத்தான சந்தர்ப்பம் சோதனைக் கூடம் நமது வாழ்க்கை

நேயர்களே! வாழ்நாள் முழுவதும் வீண் விவகா ரங்களில் கழித்து, கடவுள் நமக்குக் கொடுத்துள்ள பேரறிவையும் கிடைத்தற்கரிய மானிட சரீரத்தையும் கேவலம் கீழ்த்தர விஷயாதிகளில் ஈடுபடுத்தி, உண் மையை உணராமல் கிடந்துழலும் நாம் திருந்தவேண்டாமா?

ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் [மூன்றும் பை]

முற்பிறவியன்பு வாசனையால் நிலைப்பது

மன நினைவு, வாசனை என, வடமொழியில் கூறப்படும் அது பாவம் என்றும் சொல்லப்படும். மன நினைவு ஆகிய

திருப்பழனித தேவனுக்கு ஹரஹரோஹரா ஸ்வாமி

திருவேரகச் செல்வனுக்கு ஹரஹரோஹரா ஸ்வாமி

ஆறு நல்வழிகளிலும் தீய வழிகளிலும் ஓடிக் கொண்டிருக்கும். தாளாண்மை எனப்படுகிற பௌருஷப் பிரயத்தனத்தால் அவ்வாசனை நதியை மனிதர் நல்வழியில் திருப்ப வேண்டும். ஈண்டு அறியத் தக்கது ஒன்றுண்டு. இறைவனதாற்றல் தீயவழியிற் சென்ற வாசனையால் தீச்செயல்களில் ஈடுபட்டவனையும் நல்வழிகளிலேயே சேர்ப்பித்தும் விடுகிறது, என்பதுவே அது. அதுவே இறைவன் ஆட்கொளும் அருள்.

ஸ்ரீவசுதேவரிடமிருந்து ஸ்ரீ கோபால மூர்த்தியைத் தியானம் பண்ணுவதாகிய வைததீக்ஷையைப் பெற்று ஆமை தன் குஞ்சுகளை நினைவால் வளர்ப்பது போல் ஸ்ரீ கோபாலனை ஹிருதயாலயத்தில் எழுந்தருளப் பண்ணி வழிபட்டு வந்தவளும் (கம்ஸனுடைய வீட்டில்) சிறைக் காவலில் இருந்தவளும் திருமேனியின் நுடங்கெழிலால் (காந்தி) வீட்டைப் பிரகாசப்படுத்தியவளும், புன்முறுவல் முகம் படைத்திருந்தாளுமாகிய அத்தேவகியைத் கொலைப் பாதகனான அக்கம்ஸன் கண்டான். முன்பு இவள் இவ்வாறிருக்கவில்லை, என்னுயிரை வாங்கப்போகிற ஸ்ரீ ஹரி இவளது மனத்துட் புகுந்திருக்கவேண்டும். இதனால் இவ்வளவு சௌந்தர்யம் இவட்கு ஏற்பட்டுள்ளது. திருமாலோ காரியத்தில் குறி வைப்பார். ஆற்றல் வீணாக்கிக் கொள்ளாதவர் இயளோ ஒரு பெண். நம் தங்கை. கரு வயிற்றிற் கொண்டவள். இவள் கொலை, புகழ், செல்வம், ஆயுள், அனைத்தையும் அழித்து விடும். தீயனவே செய்பவனுக்கு இம்மையிற் பலர் சாபம். மறுமையில் விழுங்கியுமிழா நரகம். என்றிப்படியெல்லாம் கம்ஸன் யோசித்துத் தேவகியைத் துன்புறுத்தலைக் கைவிட்டுத் திருமாலின் வருகையையே எதிர்பார்த்து உலகமே பகவானின் பல்கோடியுருவமடங்கிய சிமிழாக எண்ணிப் பயந்து நின்றான்.

உட்காருமிடங்களில் எல்லாம் பிள்ளைப் பெருமான். படுக்குமிடங்களிலும் பிள்ளைப் பெருமான். நிற்குமிடங்களிலும் பாலகிருஷ்ணன். சோறிட்ட பொற்றட்டினிலும் குழந்தைக் கண்ணன். உட்காரவும், படுக்கவும், நிற்கவும்,

உண்ணவும் முடியாமல் வெளியில் உலாவப்போய்க் காலடி வைக்க அங்கும் பிள்ளைப் பெருமாள். இப்படிப் பார்க்கு மிடமெல்லாம் பிள்ளைப் பெருமாளாகப் பகைமைகொண்டு பயமும் பிடித்துச், சிம்ம சொப்பனமாக அக்கம்ஸன் கண் ணையே இடைவிடாமல் கருதி வந்தான். பகையாய்த் தன்னை எண்ணுவோர்க்கும் பாங்காய்ப் பரமானந்தம் அருளுவது அத்திருமாலின் திருவருட் சக்தியயல்லன்றோ.

ஸ்ரீ தேவகி வசுதேவரது மன நினைவரும்பு, ப்ருச்னி சுதபஸ் பிரசாபதிகளாக மூதன்முதல் அவ்விருவரிருந்த போது பகவான் ப்ருச்னி கர்ப்பர் என்னும் புதல்வராக வாசனுபலத்தால் மலர்ந்தது.

அம்மன நினைவு மலர், பின் அதிதி-காச்யபராக அவ் விருவரிருந்தபோது பகவான் உபேந்திரவாமன மூர்த்தி குமாரராக வாசனுபலத்தால் காயாகிச் செங்காய் நிலையுற் றது.

அம்மன நினைவுச் செங்காய் ஸ்ரீ தேவகி வாசுதேவரது தேவகி வசுதேவர் என்ற இந்த 13. ஆம் பிறப்பில் பகவான் குழந்தைக் கண்ணனைப் பழம் நீ எனக்கனிந்த பழமா யிற்று. வாசனையால் அம்முற் பிறவியன்பு, நிலைத்த தாலன்றோ ஸ்ரீ தேவகி வசுதேவருக்குத் திருமால்-உல களந்த திருமால் - உலகடக்கிய வயிறுடைய திருமால் - பிள்ளைப் பெருமாள் என மகனுமாகி "உலகநாதன் தந்தை வசுதேவர்" என உலகமே போற்றத் திருக்கண்ணன் அவ தாரஞ் செய்து பெறலரும் பேரின்பம் அவர்க்குத் தந்தனர். என்ன கார்காலம்! எல்லாப் பருவப் பயன்களும் ஒருங்கு காணப்பெற்ற ஒரு புதுக் கார்காலம்! அனைத்தும் சாந்தி யுற்ற சமயம். உரோகிணித் திருநாள்! முத்துப் பந்தலென மின்னிற்று அந்நள்ளிரவில் வானம்! நல்லிளங் காற்று! நாடெங்கும் நறுமணம்! நீர் நிலைகள் தெளிந்தன! தெளிவு பெறாதது கம்ஸன் ஒருத்தனின் மனம் மட்டுமே! விண் ணில் தேவதுந்துபி நாதம். கின்னரர் கந்தர்வர்களின் கானம்! சித்த சாரணர்களின் தோத்திரம்! அப்சரசுகளின் ஆட்டம்! வித்யாதரிகள் நாட்டியம்! அக்னி ஹோத்ராக்

கினிகளின் எழுநாக் கொழுந்து வளையம்! தேவ முனிவர்கள் பெய்த மலர்மாரி; மேகங்களின் குமுறலொலி! ஊசியால் பிளக்க முடியாத அக்காரிருட்பொழுது! அத்தகைய வேளையில் கிழக்கில் பிறை எனத் தேவகிபால் சனார்த்தனன் பிறந்தான். தோன்றினன் தோன்றாதவன். அற்புதத் திருமேனியன். செந்தாமரைக் கண்ணன். நான்குகையன். சங்கம் ஒரு மலர்க்கரத்தில். சக்கரம் ஒரு மலர்க்கையில். கதை ஒரு திருக்கையில் உள்ள மலர் பறிப்பது குறிக்கும், தாமரை மலர் ஒரு கைம் மலரில். வலமார்பில் ஸ்ரீவத்ஸமறு. கௌஸ்துப மணிப்பதக்கம் திருக்களுத்தில். அரையில் மஞ்சள் பொன்னுடை. கருமுகில் வண்ணம். வைடூரிய முடி. வைரக் கடுக்கன்கள். அடர்த்தியான சுருண்ட முடி, அழகான அரைஞாண் நவரத்னத் தோள்வளை. டமதுராகக் கங்கணம். இந்திர நீலக்கன் மோதிரம். இப்படியாகத் தன் பூர்வ ஜன்ம புண்ணிய டலனாய்ப் பகவானைக் கண்ணாரக் கண்டு வசுதேவரும் தேவகி தேவியும் துதித்தனர்.

இங்ஙனமாகக் கிருஷ்ணாவதாரோத்ஸவம் சிறையில் நடந்தது. கைதிக்கு அவ்வேளையில் இன்பக் கடல் நீரில் நீராடவே முடிந்தது. மனத்தால் மட்டுமே பதினாயிரம் பதினாயிரமாகக் குடஞ்சுட்டுக்களான கடோத்னிப் பாற் பசுக்களை வசுதேவர் தானஞ்செய்து கிருதார்த்தராகிய இன்பமுற்றார்.

(தொடரும்)

சொற்பெருங் பொருட்கடல்-முதல்முத்து

V. S. வெங்கட ராமன்

"செகதல மீதில் பகர்தமிழ் பாடற்
செழுமறை சேர்பொற் புயநாதா"

என்ற திரு அருணகிரியார் வாக்கு, வடிவேலன் புகழ் வான்மீகி வியாசாதி முனிவர்களின் வாக்குகளிலும் வேதங்களிற் போல வந்துள்ளது என்பதை அறிவிக்கும்.

பெரும்பொருளாம் முருகனையும், மற்றைப் பொருள்களையும் காட்டும் சொல் ஒன்று இல்லையேல் மூவுலகும் இருளுலகங்களாகும். சொற்கள் யாவிலும் பொருளாய் நின்றவன் முருகனே. அதனாற்றான் முருகப் பிரானது பல்லாயிரந் திருநாமங்களுள் சொற்பெரும் பொருட் கடல் எனவும், சொல்லன் எனவும் இரு திருப்பெயர்கள் அம் முருகற்கு வாய்த்துள்ளன; அவை வடமொழியில் முறையே சப்தப் பிரம சமுத்ர ; சாரசுவத : என்று கூறப்படும். அனைத்தும் முருகனன்றோ.

சொற்பெரும் பொருட் கடல் 2 ஆவது முத்து

வான்மீகி முனிவர் ஓரிடத்தில் குழந்தை வேலனைச் "சிசு : சரவணே யதா" என்று சரவணப் பொய்கையில் பாலுக்கு அழுதாற்போல் நடித்த குழந்தையைச் சிசு என்று உவமையில் நினைக்கிறார்.

இதனால் குழந்தை என்பது முருகப்பிரானது பல் கோடித் திருப் பெயர்களுள் ஒன்றாகும். குழந்தை சௌக்கியமா ? என்று கேட்கும்போது அரி சிவா என்றழைத்த விற்போல அறியாமலும் முருகனது திருநாமம் வந்துவிடுகிறது. குழந்தை என்பது மட்டுமே மக்கட்கு இடுவதும் அறியத்தக்கது. சிசு என்றால் குழந்தை என்பதுதானே பொருள். குழந்தை நோய்களைப் போக்குபவன் குழந்தையாகவும் காட்சியளிக்கிறான். பாலக் கிரஹாரிஷ்டங்களைப் போக்குபவன் முருகன் என்பது பிரசித்தம்.

சொற்பெரும் பொருட்கடல் 3வது முத்து

வான்மீகி முனிவர் மற்றோரிடத்தில் முருகப்பிரானை வேலெடுத்துப் பேரொளி மேனியனைப் மயின்மீதமர்ந்த அறியவொணாத் துணைத்தேவன் எனும் பொருளில் " சக்திம் ஆதாய தேஜஸ்வீ குக : சிகிகதோயதா ,' என்று உவமையில் நினைத்து மொழிந்து இன்புறுகின்றார். வெற்றி வடிவேலன் முனிவர் மனத்தையும் வென்றதில் வியப்பேதுமில்லையே, உலக நண்பருக்கு இனியன் அல்லவோ அம் முருகன்.

வையாபுரி வாசனுக்கு ஹராஹரோஹர ஸ்வாமி

வள்ளி மணவாளனுக்கு ஹராஹரோஹர ஸ்வாமி

இதனால் குகன் என்பது ப்ரசஸ்தமான திருநாமம் என்று தெரிகிறது, எனச் சொல்லவும் வேண்டுவதில்லை. இருதய குகையிலிருந்து இருளை ஒழிப்பவன் அவன் ஒருவனே என வான்மீகி வியந்து கூறி மகிழ்கிறார்.

சொற்பெரும் பொருட்கடல், 4 ஆவது முத்து.

இளமையும், அழகும், இன்பமும், அறிவும், யாவராலும் வேண்டப் படுபவை. முருகன் இவ் வனைத்துமாய் நின்ற இனியன். இனிமை வேண்டுவோர் யாவராலும் வேண்டப்படுபவன் இனியனும் அம் முருகனே. "உலக நண்பருக்கு இனியன்" என்பது முருகப் பிரானது பல் கோடித் திருநாமங்களுள் ஒன்று. விசுவாமித்திரர்-என்ற முனிவருக்குத் தமிழில் பொருள் உலக நண்பர், உலகை நச்சினர் எனபதாம். விசுவாமித்திர முனிவரால் சப்தரிஷிகளின் உதவியோடு முருகன் காயத்ரி யுபதேசம் பண்ணப் பெற்றார்போலப் பாவனையாக நடித்துக்காட்டியவர் ஆனதாலே முருகனுக்கு விசுவாமித்திரப் பிரியர் என்ற திருநாமத்தை வியாசர் வழங்கினார்.

உலகை நச்சினர்க் கினியர் என்ற தமிழ்த் தொடரும் விசுவாமித்திரப் பிரியர் என்ற வடமொழித் தொடரும் ஒரே பொருளில் முருகனுக்கு வாய்த்த இரண்டு திருப்பெயர்த் தொடர்களே. விசுவாமித்திரர் முருகனை வழிபட முதல் வழிகாட்டி யாக உலகை நச்சினர்க்கு இனியர் என முருகன், திருநாமம் உற்றனன். இத் தமிழ்த் தொடரில் உலகை என்பது எக் காரணத்தாலோ சொல்லப்படாமல் போய் மறைய நச்சினர்க் கினியர் எனமட்டும் தமிழ்நாட்டில் மக்கட்குள் எவ்வகுப்பின ரிடையும். முருகன் திருநாமம் இடும் வழக்கம் நிலவி வந்திருக்கிறது என்பதும் ஈண்டு அறியத் தக்கது. முருகனை நேசித்தவர் எல்லாரும் உலகத்தை நேசித்தவர் ஆவர். உலகத்தை நேசித்தவர் யாரும் முருகனை நேசித்தவர் ஆவர். அடியார்க்கு இனியர் ஆவதில் முருகனுக்கு எத்துணை ஆர்வம். பாருங்கள். பெயரையும் நச்சினார்க்கினியர் என வைத்துக்கொண்டார் நம் செவ்வேள். முருகா ! முருகா ! (தொடரும்)

அது போதுமே !

(செ. பொ.)

'போதும் என்ற மனமே பொன்மருந்து'. இது சாதாரண வழக்கத்திலுள்ள பழமொழி. நாம் எடுத்த கட்டுரைத் தலைப்பு 'அது போதுமே' என்பதாகும். ஒருவன் போதும் என்று சொல்லுவது எப்பொழுது? தான் நினைப்பது, தனக்கு வேண்டிய அளவைவிட பலமடங்கு அதிகமாகக் கிடைத்தால் அப்பொழுது தான் போதும் என்ற சொல் வரும். அதுவும் சிலவற்றில்தான்.

ஆனால் பணமென்றால் பிணமும் வாயைத்திறக்குமல்லவா? பணம் எவ்வளவு கிடைத்தாலும் போதும் என்ற சொல்லே வாயிலிருந்து வராது. கிடைக்கும் பணத்தைத் தன் வீட்டில் வைப்பதற்கு இடமில்லையாயினும் இன்னொரு வீடுகட்டி அதில் வைப்பர். என் நண்பர்ஒருவர், 'சோறு போட்டால் சாப்பிட்டுவிட்டு வயிறு நிறைந்த உடன், போதும் என்கிறானே' என்கிறார். பணம் மனிதனைக் கலக்கும். அறிவைக் கெடுக்கும், உயிரை வாங்கும். இவ்வுலகில் எல்லாம செய்யும் ஆனால் சோறோ வயிறு வரைக்கும் தானே என்றேன்.

எல்லைக்கு மேற்பட்டவுடன் போதும் என்பது போல் யாமும் போதும் என்பதற்கு எல்லை காட்டுகிறோம். முன்னோர் சொன்ன முறைப்படி அந்த அது எது' கடவுள் நிலையெய்தியோர் போதும் என்றே இருப்பர். அவர்கள்தான் தானாகி நின்றவர், அவரன்றி அவர் உடல் அசையாது. தானாகி நின்றவர்யாவர்? ஐம்புலன் அடக்கி, அன்பு பூண்டு, அருள் காட்டி, மானம் அபிமானம் விட்டு, நின்றவர். தானாகி நின்றவர்-தானாகி நின்றவர் ஞானாதிபதியாவர். சேனாதிபதிப்போல. ஒரு நாட்டின் படைகளை எல்லாம் எப்படி ஆட்டுகிறான் சேனாதிபதி. நாட்டிலுள்ள படைகளின் பொறுப்பு போர்முறை எல்லாம் கற்று அறிய வேண்டும். அதுபோல ஞானதிபதி மருள்நீங்கி மாசற

வேண்டும். மெய்ப்பொருள் கண்டான். கற்றபின் அதற்குத்தக நின்றான். செம்பொருள் கண்டான். யான் எனது என்னும் பற்றற்றான். வாய்மையால் அகம் தூய்மையானான். தன்னெஞ்சறியப் பொய் புகலாதிருந்தான். தங் கருமஞ்செய்து தவசியானான். அருளாள்வான் இவன். தன்னுயிர் அஞ்சுதல் இவனுக்கு இல்லவே இல்லை. வெகுளியை நீக்கினான். அழுக்காற்றை அகற்றினான். பொறுமையைப் போற்றினான்-ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தான். அடக்கத்தைத் தழுவினான். நிறைமொழி மனிதன் ஆனான். செயற்கரிய செய்தான். போதும் என்றது மனம், போதும் என்று இருந்துவிட்டான் இவனும். தானாகி நின்றான் அந்த அது எது? மானம் அபிமானம் விட்டுத் தானாகி நின்றது தான் அது. இதைப் பாரும்! சட்டமாய்ப் பாரும்! ஊட்டமாய்க் கேளும்! தேட்டமாய்க் கொள்ளும்! என்கிறார் ஒருவர்-யார்? மேலே குறிப்பிட்ட ஞானதிபதி. கேளுங்கள் :—

> " மானாபிமானம் விட்டுத்
> தானாகி நின்றவர்க்குச்
> சேனாதி பதி போல
> ஞானதி பதி யுண்டு
>
> பாருமே! கெட்டிக் காருமே-உள்ளே
> சேருமே! அது போருமே"

அந்த ஞானதிபதி யார்? தெரிந்து கொண்டீர்களா? நந்தனார் ஐயா! நந்தனார்.

தெய்வ வழி பாடு

(D. ராமஸ்வாமி அய்யங்கார்)

நாம் ஏன் தெய்வத்தை வழிபடுகிறோம் என்ற ஒரு கேள்வியைக் கிளப்பினோமானால் அதற்குப் பலர் பலபடியாகப் பதில் கூறுவர், முக்கியமாக தெய்வத்திற்குப் பயந்து

வழிபடுவோர் (God fearing man) ஒரு சாரார் என்றும் தெய்வத்தினிடத்து நேசத்தால் வழிபடுவோர் (God loving men) ஒரு சாரார் என்றும் இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். மேல் நாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றுபவர் நமக்குக் கடவுளை நம் குறைகளை நீக்கி வேண்டுவன வற்றை நல்கும் ஒரு வியக்தி (Provi dence) என்று போதித்தார்கள். அவர்களுடைய நித்தியப்படி தொழுகையிலும் "இன்று எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அளித்தருள வேண்டும்" என்ற ஒருவாக்கியம் முக்கியமாகக்காணப்படுகிறது. இந்த மனேபாவத்தை அநுசரித்தால் தெய்வம் என்பது நம்முடைய சௌகரியங்களுக்காக ஏற்பட்ட ஒரு பெரிய சக்தி என்றுதான் கிடைக்கிறது அந்த மாதிரி எண்ணத்தை விருத்தி செய்து கொண்டு போனல் வேண்டியதைக் கொடுத்தால்த்தான் தெய்வம் என்று பாராட்டியும், இல்லாவிட்டால் அவன் பால் உள்ள பற்றை கைவிட்டும்விடுகிறார்கள். நீ எனக்கு இந்த நன்மையைச் செய்தால்தான் தேங்காய் உடைக்கிறேன் என்று சொல்வது ஓர் வியாபார முறையைப் பின்பற்றுவதேயாகும். இந்த எண்ணங்கள் உடையவர்கள் கடவுள் ஏதாவது கேடு செய்து விடுவாரோ என்று பயந்து வழி படுகிறவராவார்.

நமது தமிழ் நாட்டில் தெய்வ உண்மையைக் கண் கூடாகக் கண்டு அநுபவித்த மகான்கள் வழிபாடோ முற்றிலும் அன்புநிலையையே பின்பற்றியதாகக் காண்கிறது. "மீளாத்துயர் தரினும் உனக்கு ஆட்செய்வதிலிருந்து நான் மீளேன்;" என்று தெய்வம் நல்கும் நன்மை, தீமைகளைப் பொருட்படுத்தாது, அவனையே பின்பற்றி அவனுக்கே அடிமை யாவார் தமிழ்த் தொண்டர்கள் அவர்கள் தங்களுக்கும் கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தை எவர் போக்கிலும் போக்கொணுத ஆன்ம உறவு என்று உணர்ந்தவர்களா கையால், தெய்வ வழிபாடு என்பது அவர்களுக்கு மூச்சு விடுவது, உட்கொள்ளும் ஆகாரத்தை ஜீரணம் செய்து கொள்வது போன்ற இயல்பானதொரு செயலேயன்றிப் பிறிதல்ல. ஒரு அன்பர் பாடுகிறார்:

போரூர்வாழ் புண்யனுககு ஹரஹரோஹர ஸ்வாமி
போதம் தரும் புனிதனுக்கு ஹரஹரோஹர

"பெயரும் கருங்கடலே நோக்கும் ஆறு ஒண்பூ
உயரும் கதிரவனே நோக்கும் உயிரும்
தருமனையே நோக்கும் ஒண்தாமரையாள் கேள்வன்
ஒருவனையே நோக்கும் உணர்வு"

செந்தழலாக வெந்து அதி தீக்ஷணமாகக்காயும் சூரியனுக்குத் தான் தாமரைப் புஷ்பம் மலருகிறது. குளிர்ச்சி பொருந்திய கிரணங்களையுடைய சந்திரனைக் கண்டு மூடிக்கொள்கிறது. அது அத்தாமரையின் இயல்பு எம்மலையிலுதித்த ஆறும் கடலிலே புகுகிறது அது ஆற்றின் இயல்பு. அம்மா திரியே ஒவ்வொருமனிதனுடைய ஆத்மாவும் இறைவனையே நாடுகிறது. "கதிமிகுத்து அம்கோல் (கொழு கொம்பு) தேடி யோடும் கொழுந்ததே போன்றதே மால்தேடி ஓடும் மனம்" என்றும் "எளிதாகத் தாய்நாடு கன்றேபோல் தண துழாயான்" அடியையே மனம் நாடுகிறது என்றும் ஆழ்வார்கள் பேசுகிறார்கள். அருணகிரியாரும் இவ்வனுபவத்தை ஒட்டி "தாவிப்படரக் கொழு கொம்பிலாத தனிக்கொடி போல்" தமது நெஞ்சமும் வாடுகிறதென்று பாடுகிறார்.

இந்த உயர்ந்த ஆத்மானுபவத்தை அடைந்த பேர்கள் கடவுளைக் காப்பவனஎன்று மட்டும் கருதாமல், காத்தாலும் கைவிட்டாலும் அவனே கதி என்று மனம் தேறியிருப்பார்கள். "களைவாய்துன்பம் களைவாது ஒழிவாய் களை கண் மற்றிலேன்" என்பது அவர்களுடைய மனநிலை. "அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றினு" னாலும் குழந்தை வேறு இடம் செல்லுமோ? "கண்டார் இகழ்ந்திடவே காதலன் செய்திடினும் கொண்டானை யல்லால்" குலமகள் வேறு புருஷனை ஏறிட்டுப் பார்ப்பாளோ? வாளால் அறுத்து, திராவகத்தால் சுடினும், மருத்துவன்பால் நோயாளன் என்றேனும் கடிந்து கொள்கிறானா? பல மாதங்கள் மழை இல்லாதபோதும் பயிர்கள் அவ்வானத்தைத் தானே எதிர்பார்க்கும்? அப்படியே ஆண்டவன் தம்மை வேண்டாது வெறுப்பவன்போல் காணப்பட்டாலும், அவன் தானேயன்றி மெய்யடியார் மற்றொன்றையும் மதியார்கள். அவர்களுக்கு அவனிடத்து அவ்வளவு

பாசம். மேற்சொன்ன இரண்டு மனோநிலைகளையும் ஒப்பிட்டுப்பாருங்கள். ஆண்டவன் உள்ளம் எந்த மனோநிலையில் நம்மிடத்திருந்தால் உகக்கு மென்பதை நீங்களே உணருவீர்கள்.

தெய்வம் நம்மை எப்படிக் காதலிக்கிறது என்பது, நாம் தெய்வத்தைக் காதலித்த போதுதான் நமக்குத் தெரியவரும். அற்பஞான சக்திகளோடு கூடிய நம் காதல் அளவில் மிகச்சிறியது. எல்லாவற்றிலும் சீரிய அவனது காதல் எவ்வகையிலும் பெரியது, உயர்ந்தது. அக்காதலுக்கு நாம் இலக்காக வேண்டி நாம் செய்ய வேண்டுவது வேறொன்று மில்லை அவனை அன்போடு வழிபடுவதொன்று தான். அவனால் தான் நாம் எல்லா நற்பயனையும் எய்து கிறோம். நம்மால் அவனுக்குச் சிறிதளவும் பயன் ஏற்பட ஏது வில்லை யென்பதை மறக்கலாகாது.

பானக பூசை

[என். எஸ். இராமச்சந்திர ஐயர். ஸ்கந்த நிகேதனம்]

முருக பிரானின் அருளை அடைய பற்பல வழிகள் உள்ளன. அவன் திருப்பதிகளைத் தெரிசித்தல் பெருமையை யுரைத்தல், திருப்புகழை ஓதுதல், பஜனைகள், பண்ணுதல், அகண்ட முருக நாம கீர்த்தனம் செய்தல், ஷடக்ஷர ஜப யக்ஞம் நடத்தல், நாம ஸப்தாஹம் நடத்தல், அடியவர்க்கன்னம் அளித்தல், இலக்ஷார்ச்சனை புரிதல், வேதோக்த பூசை செய்தல் முதலியனவாம். இம்முறைகளைப் பற்பல விடங்களில் அன்பர்கள் தத்தம் மனப்பான்மைக்குத் தகுந்தவாறு ஆசரித்து வருகின்றனர்.

நம் அயல் நாடாகிய கேரளத்தில் முருகோபாஸனையிற் சிறந்தவர்கள் கடைப் பிடித்தொழுகும் மார்க்கம் பானக பூசையாகும். இப் பூசை முருகனுக்கு மிகவும் உகந்ததாகையால் இதன் ஆகமத்தைப்பற்றி ஈண்டு சுருக்கமாக வரைய விழைகின்றேன்.

ஆறுமுக அய்யனுக்கு ஹராஹரோஹரா

ஆச் டிப்பர தேசிக்கு ஹராஹரோஹரா

முன்னொரு காலத்தில் கயிலேயங்கிரியில் வீற்றிருக்கும் சிவபெருமானிடம் பரமானந்த வடிவினன் ஆகிய பார்வதி பிராட்டியார் தமக்கு வேதாந்த தத்துவத்தை உபதேசிக்கும் பொருட்டுப் பிரார்த்தனை செய்துகொண்டனர் பரமனும் அதற்கிசைந்து தத்வோபதேசம் செய்ய ஆரம்பித்தார். அதுகாலை அம்மன் தமக்கருகில் விளையாடிக்கொண்டிருந்த கணபதி, குமரன் இவர்களின் விளையாட்டில் கருத்தைச் சிறிது செலுத்தலாயினர். கவுரியின் கவனமின்மையைக் கண்ணுற்ற கயிலேநாதன் கடுஞ்சினங்கொண்டு உமையவளை நோக்கி, 'ஏ! கவுரி, மக்கள்மீது அன்பு செலுத்தும் இயல்பு, கேவலம் மானிட வகுப்பைச் சேர்ந்த பெண்களுக்கே இயற்கையானது. அக்குணம் உன்னிடமிருப்பது ஏலாது; ஆகையால் நீ இன்றுதொட்டு மானிடப் பெண்ணுருவைத் தாங்கி பூவுலகிற் சென்று வாழுதி'' எனச் சாபமிட்டனர்.

உடனே தேவியார் கயிலாச மலையினின்றுக் கீழேவிழ ஆரம்பித்தனர் ஆகாய மார்க்கமாக கீழ் நோக்கி விழுகையில் அம்மன் தம் குற்றத்தைப் பொருத்தருளி சாப விமோசனமளிக்க வேண்டுமெனப் பரமனிடம் முறையிட்டனர். அப்பொழுது கருணையங்கடலாகிய காலாந்தகன் தேவியைப் பார்த்து, "அம்பிகே, நீ அஞ்சேல். காஞ்சி நகர் சென்று சிறிது காலம் தவவாழ்க்கை வாழக்கடவாய். அதன் பின்னர் யாம் வந்து உன்னை மீட்போம்'' என்று அபயமளித்தார்.

மூவுலக மாதாவாகிய அம்பிகை மானிட வேடங் கொண்டதைப் பார்த்த குமரனும் கணபதியும் தாங்களும் கயிலேயை விட்டு அன்னையின் பின்னர் வந்துவிட்டனர். இம்மூவரும் மானிடவேடதாரிகளாகப் பூவுலகில் காஞ்சிக் கருகாமையிலுள்ள ஒரு கோர வனத்தை வந்தடைந்தார்கள். தாய் மீது அன்பு மிகுந்த முருகன் அந்த அரண்யத்தில் வாழைக் கம்பங்களால் ஒரு குடிசையை நிருமித்து அதனுள் தாயாரையும் தமையனையும் செல்லுமாறு வேண்டிக்கொண்டு தான் ஒரு குழந்தையின் வடிவத்தைப் பூண்டு கரத்தினில் ஒரு பிரம்பையும் பிடித்துக்கொண்டு

அந்தக் குடிசைக்கு முன் நின்றுகொண்டு காவற்றொழில் புரிந்து வந்தான்.

சகன் மாதாவிற்கு நேர்ந்த இந்த இன்னலை உணர்ந்த மகாவிஷ்ணு செகமெலாம் ஆனந்தமின்றியும் ஒளிகுன்றியும் இருப்பதைப் பார்த்து மிகவும் வருத்தமுற்று ப்ரம்ம தேவன், இந்திராதி தேவர்கள், ஸனகாதி இருடி கணங்கள், யக்ஷர், வித்யாதரர், சித்தர் ப்ரேத கணங்கள், பூத கணங்கள், முதலியவருடன் அம்மனைத் தெரிசிப்பதற்காக மண்ணுலகத்துள்ள அவ்வனத்தின்கண் இரவில் முதல் யாமம் முடிந்தபின் வந்துசேர்ந்தார். காவற்றொழில் புரிந்து வந்த சிறு குழந்தையைக் கண்டார்.

குழந்தையிடம் சென்று திருமால், "ஏ! சுந்தர மூர்த்தி யாங்கள் சகன்மாதாவாகிய பார்வதீ தேவியாரைத் தெரிசிப்பதற்காகவே வந்துள்ளோம். தயைமலிந்து நீ அதற்கு அநுமதி தரவேண்டும்" எனப் பகர்ந்தார். அதற்கு அக்குழந்தை தனித்திருக்கும் ஒரு ஸ்திரீயை நடுநிசியில் பார்ப்பது நியாயமல்ல. காலையில் பார்த்துக் கொள்ளலாம் எனறு விடைபகர்ந்தது. மாயவன் மறுமொழியொன்றும் மொழியாது வாளா விருந்துவிட்டார்.

அப்பொழுது மேதாவியாகிய அகத்திய முனிவர் அச் சிறுவனைப் பார்த்து, "நீ கூறியது முற்றிலும் பொருத்தமே. ஆயினும் நான் பகர்வதையும் சற்றுக் கேட்கவேண்டும். எனது குருநாதன் தம் அன்னையுடன் இந்தக் குடிசைக்குள் இருக்கிறார். அவரைப் பார்ப்பதற்காக நான் வந்துள்ளேன். சீடனுக்கு தன் குருவை எச்சமயத்தும் பார்க்கலாம். அஃது அறநெறிக்குப் புறம்பாகாது. தவிர குருவானவர் தந்தைக்குச் சமானமானவர் அவருடைய தாயாயார் பிதாமஹியாவார் ஆகையால் அவர்களைப் பார்ப்பதற்கு எனக்கு விடைகொடுக்க வேண்டும்" எனக் கூறினர்.

இதனைக் கேட்ட சிறுவன் முனிவரை அங்கேயே சற்றுநேரம் இருக்கப் பணித்துவிட்டு தன் அன்னையிடம்

சென்று விஷயங்களை யெல்லாம் எடுத்துரைத்தான். அம்பிகையும் தேவகணங்களின் வருகையை அறிந்து மகிழ்ந்து முருகனைத்தன் மடிமீதில் அமரவைத்து கணபதியைக் கூப்பிட்டுத் தேவர்களை உள்ளே அழைத்து வரும்படி கட்டளையிட்டனர்.

தேவாதிகள் உள்ளே நுழைந்து அம்மன் அடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்தனர். பல்வகையான காட்சிப் பொருள்களை உமையவள் முன்னர்வைத்து உளம்மகிழ்ந்து வணங்கி நின்றனர். ஆனால் அம்மனுக்கு அப்பொருள்கள்மீ தொன்றும் மனம் நாடவில்லை.

அரசனையும், இறைவனையும், குருவையும் பார்க்கப் போகும்பொழுது வெறுங்கையாகப்போகக்கூடாது என்ற விதியை அகத்திய முனிவர் நன்குணர்ந்திருந்ததனால், தன் கையில் ஒன்றுமில்லாததைக் குறித்து அவர் சிறிது மனச் சோர்வுற்றனர். பின்னர் அருகேயுள்ள காட்டிற்குள் நுழைந்துஏதாவது பொருள்கள் கிடைக்குமாவென்றுதேடினார். அங்கு ஒரு கரும்புத்தடியும் கொஞ்சம் பாசிப்பயறும் கிடைத்தன. கரும்புத்தடியைத் தட்டிப் பிழிந்து அதன் பானகத்தை ஒரு தொன்னையில் எடுத்துக் கொண்டார். பாசிப் பயறினை மற்றொரு தொண்ணையிலும் வைத்துக் கொண்டு குடிசைக்குள் நுழைந்து தன் குருநாதனாகிய முருகனுக்கு அர்ப்பணம் செய்து வணங்கிநின்றார்.

பசியாலும் தாகத்தாலும் வாடியிருந்த கணபதியும் குமரனும் தேவர்களனைவரும் பார்த்து நிற்க வெகு ஆர்வத்துடன் பயற்றையும், பானகத்தையும் உட்கொண்டு ஆனந்த நர்த்தனம் செய்தனர். மீதியிருந்ததை அம்மனும் அருந்தி ஆனந்தமெய்தினர்.

பின்னர் அகத்திய முனிவரைப்பார்த்து பார்வதி தேவியார், "ஓ! மாமுனியே தங்களுடைய அன்பு மேலீட்டினால் நாங்கள் மூவரும் எங்கள் பசியினை ஆற்றிக்கொண்டோம். மிகவும் திருப்தியடைந்தோம். உம்முடைய பானகமும் பயறும் என்குழந்தைகட்கு வெகு ஆனந்தத்தைக் கொடுத்துவிட்டன. இக் கலியுகத்தில் முருகனை

ஆராதிப்பவர் உம்மைப்போல் பானகத்தையும் பயற்றையும் நிவேதனம்செய்து ஆராதிப்பாராகில் முருகன் மிகத் திருப்தியடைந்து திருவருள் பாலிப்பது திண்ணம். முருகனைப் பூசிக்கும்போது கணபதியையும் என்னையும் சேர்த்தே பூசிக்கவேண்டும். பானகத்தால் தருப்பணம் செய்தல் எங்களுக்கு மிகவும் பிரீதியையளிக்கும்.

முருகோபாஸனையால் இம்மை மறுமைப் பயன்களை எளிதில் அடைவதற்கு பானக பூசையைவிடச் சிறந்த மார்க்கம் வேறொன்றில்லை. எங்களுடைய பசியையும் தாகத்தையும் ஆற்றினதால் பரமசிவனும் மகிழ்ச்சியடைந்து திருவருள் பாலிப்பார். ஓ! மகா முனியே, உமது புகழ் என்றும் ஓங்குக! சிறப்பும் நுட்பமும் வாய்ந்த இப்பூசை பூவுலகில் பானகபூசை யென்ற பெயரால் பிரசித்தமாக விளங்கும்" என உரைத்தனர்.

இந்த வரலாறு காஞ்சிபுர மகாத்மியத்திலுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டுதான் கேரளத்தில் பானகபூசை ப்ரசித்தி பெற்றிருக்கிறது.

சுபம். சுபம். சுபம்.

இலவச வெளியீடு

'சுகாஸ்ரம நித்திய பிரார்த்தனை'

என்ற துதிகளடங்கிய சிறிய புத்தகத்தை

வேண்டுபவர்களுக்கு இலவசமாக அனுப்புகிறோம்

விலாசம் :— "சுகதாஸ், சுகாஸ்ரமம்"

புலியூர், P. O. சிக்கல் (வழி), தஞ்சாவூர் ஜில்லா.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற

நகை வியாபாரிகள்

"ஸ்வர்ண மாளிகை"

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணிமூலவீதி, - மதுரை.

TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No. 55044.
Eidted & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras.

Reg. No. M. 5390

இல்லத்தை தெய்வம் கமழ அலங்கரிக்க சைவ சமயாசாரியர்

நால்வர் படம்

பல வர்ணத்தில் நூதன முறையில் தயாரிப்பு

பரமன், பார்வதி, கணபதி, முருகன்

நடுவில் தரிசனம் கொடுக்க,

அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் அவர்கள்

மனதைக் கவரும் வகையில் தோன்றுகிறார்கள்

10 × 14 அளவில் ரூ. 1-0-0

எங்கள் மற்றப் படங்கள்: ஸ்ரீ குமர குருபரன் ரூ. 1-4-0

ஸ்ரீ அருணகிரி நாதர் 14 × 20 அளவு பல வர்ணம் ரூ. 1-8-0

யுனைடெட் கன்ஸர்ன்

நஞ்சன்கூடு ஆபீஸ், 54 பந்தர் தெருவு, மதராஸ்-1

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகள்

குழந்தைகளுக்கு

- 12 **காஸ்மஸ்** — கஸ்தூரி மாத்திரை.
- 18 **கர்ஜன்** — கோரோஜனை மாத்திரை.
- 15 **பாலக்ஸ்** — பேதியாக மாத்திரை.

குடும்ப அவசியங்கள்

- 99 **ஜ்வரேக்** — எவ்வித ஜ்வரங்களுக்கும்.
- 77 **காலரெக்ஸ்** — அஜீர்ணபேதி காலராவிற்கு.

தின உதவிகள்

- 55 **ஜிஞ்சிப்** — அஜீர்ண பித்த சமனி.
- 78 **கூலெக்ஸ்** — உஷ்ண, சமன, ஸ்நான சூதலம்.
- 61 **நஞ்சன்கூடுபல்பொடி** — (பயோரியா) பல் உபாதைகளுக்கு.

கூந்தல் செழிப்புக்கு

காஷ்மீர் குஸூம்

என்ற மலர் மூலிகையை உங்கள் எண்ணெயுடன் கலந்துகொள்க.

சிறந்த சரும வைத்தியன்

ஸான்டலக்ஸ் சந்தனக் களிம்பு.

காயம், தீப்புண், சொறி, சிரங்கு, பரு, குணமடைய.

மைசூர் **பிரேமலீலா** ஊதுவத்திகள்

எமரர்ஜஸ், அகர்ஸ்பெஷல், அம்பர்ஸ்பெஷல், ஜவாது.

சோல் ஏஜெண்டு:- யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதறாஸ் 1.

"மாலா"

வாசனைகள்

*

அத்தர்கள்

*

வாசனை மெழுகு (கோன்)

*

கைக்குட்டை சென்டு

*

சில்க் பைகள் (ஆடைகளைக் காப்பாற்ற பெட்டியில் வைக்க)